Judicial Form No.53
(See Rule 42 )
**DEPOSITION OF WITNESS**
( Chapter XXIII Code of Cr.P.C )

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, ARUPPUKOTTAI

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | Sessions Case No.184/2025 |
| Deposition of Witness of PW | : | Prosecution – PW 2 |
| | | Defence |
| | | Court |

| | |
|---|---|
| Name | : அன்பு |
| Father / Husband Name | : கிருஷ்ணன் |
| Village | : கீழபரளச்சி |
| Taluk | : அருப்புக்கோட்டை |
| Caste | : |
| Calling | : தலைமை காவலர் |
| Religion | : |
| Age | : 39 |

( எதிரி ஆஜர். )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1869 (Central Act 44 of 1969 ) on the 05.03.2026

**முதல் விசாரணை :-**

1. நான் தற்போது கீழபரளச்சி காவல்நிலையத்தில் தலைமை

காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதே காவல்நிலையத்தில் கடந்த 19.02.2024 அன்று முதல் நிலை காவலராக பணியாற்றியபோது சார்பு ஆய்வாளர் மாரியப்பன் அவர்களும், நான் மற்றும் முதல் நிலை காவலர் 306 பாலமுருகன் ஆகியோர் மதுவிலக்கு மற்றும் புகையிலை தடுப்பு ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தபோது சார்பு ஆய்வாளருக்கு கிடைத்த இரகசிய தகவலின் பேரில் தெற்குநத்தம் கிராமத்தில் பெட்டிக்கடை நடத்தி வரும் சேகர் என்பவர் புகையிலை பொருட்களை சட்டவிரோதமாக விற்பதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் காலை சுமார் 10.00 மணியளவில் மேற்சொன்ன மூவரும் ஆஜர் எதிரி அவருடைய வீட்டிலிருந்தபோது வீட்டின் பின்பகுதியில் நாங்கள் தேடிப்பார்த்தபோது ஒரு மஞ்சள் நிற சாக்குப்பை சம்மந்தமாக சார்பு ஆய்வாளர் விசாரித்தபோது எதிரி முறையாக பதில் சொல்லாமல் முன்னுக்கு பின் முரணாக பேசியதால் சந்தேகம் கொண்டு சார்பு ஆய்வாளர் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் தலையாரியை அழைத்து வந்து சோதனை செய்யவா என்று கேட்டதற்கு எதிரி தானே அந்த மஞ்சள் நிற சாக்குப்பையில் இருக்கும் பொருட்களை எடுத்து ஆஜர் செய்கிறேன் என்று கூறி பொருட்களை வெளியே எடுத்தார்.

2. அந்த சாக்குப்பையில் கணேஷ் புகையிலை – 5 பண்டல்கள் (ஒவ்வொரு பண்டலிலும் 15 பவுச்சுகள் உள்ளன). அந்த 5 பண்டல்களின் மொத்த எடை 1கிலோ 125 கிராம் ஆக இருந்தது. கூலிப் – 1 பண்டல் இருந்தது. அதன் எடை சுமார் 100 கிராம் ஆகும். மேற்சொன்ன பொருட்கள் மனித உயிருக்கு தீங்கு விளைவிக்ககூடிய என்ற காரணத்தினாலும், அதனை விற்பனை செய்வதற்கு தடை உள்ளதாக கூறி எதிரியின் வீட்டின் பின்புறம் மேற்சொன்ன பொருட்களை கைப்பற்றியதற்கு சார்பு ஆய்வாளர் அவர்கள் எங்கள் முன்னிலையில் ஒரு

அத்தாட்சி தயார் செய்தார். அந்த அத்தாட்சியில் நானும் முதல் நிலை காவலரான அ.சா.1 பாலமுருகனும் சாட்சி கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படுவது தான் நாங்கள் கையெழுத்து செய்த அத்தாட்சி ஆகும். **மேற்படி அத்தாட்சி அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அ.த.சா.ஆ.1ல் நான் முதலாவதாக கையொப்பம் செய்துள்ளேன். அ.சா.1 இரண்டாவதாக கையொப்பம் செய்துள்ளார்.

3. சட்டவிரோதமான பொருட்களை விற்பனைக்கு வைத்திருந்ததாக கூறி எதிரியை கைது செய்வதற்கான காரணத்தை கூறி சார்பு ஆய்வாளர் எதிரியை கைது செய்து அவருடன் காவல்நிலையத்திற்கு அழைத்து வந்தார். மேலும் எதிரி மீது குற்ற எண் 9/2024, இதச பிரிவு 328 மற்றும் 24(1) COTPA Act பிரிவுகளின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். பின்னர் கைது செய்யப்பட்ட எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினார். சா.பொ.1 மற்றும் 2 யை தான் உதவி ஆய்வாளர் வழக்கு சொத்துக்களாக எதிரியின் வீட்டின் பின்புறத்திலிருந்து கைப்பற்றினார். இது சம்மந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –**

4. காலை 9.00 மணியளவில் நாங்கள் பரளச்சி காவல்நிலையத்திலிருந்து ரோந்து பணிக்கு புறப்பட்டோம். நானும் அ.சா.1 பாலமுருகனும் எனக்கு சொந்தமான TN 67 BW 1483 என்ற இரு சக்கர வாகனத்தில் பயணித்தோம். சார்பு ஆய்வாளர் அவருடைய இரு சக்கர வாகனத்தில் வந்தார். வடக்கு நத்தம் கிராமத்தில் காலை 9.30 மணியளவில் ரோந்தில் ஈடுபட்டோம். தெற்குநத்தம் கிராமம் அங்கிருந்து சுமார் 1 கிமீ தூரத்தில் அமைந்துள்ளது. சார்பு ஆய்வாளருக்கு கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் தெற்குநத்தம் கிராமத்திற்கு காலை சுமார் 10.00

மணியளவில் சென்றோம்.

5. எதிரியை வழக்கு சொத்துக்களுடன் காவல் நிலையத்திற்கு காலை 11.30 மணிக்கு அழைத்து சென்றோம். சம்பவ இடத்தில் நாங்கள் சுமார் 1 மணி நேரம் இருந்தோம். எதிரி வீட்டு அருகே வயதானவர்கள் இருந்தார்கள். அவர்கள் சாட்சியாக இருக்க முன்வரவில்லை. நான் சொன்ன மாதிரி, சொன்ன நேரத்தில் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றும், எதிரியின் வீட்டின் பின்பகுதியில் சோதனை செய்யவில்லை என்றும், எந்த பொருட்களையும் கைப்பற்றவில்லை என்று சொன்னால் சரியல்ல. சம்பவ இடத்திற்கு நாங்கள் உண்மையில் சென்றிருந்தால் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜரை தாக்கல் செய்திருப்போம் என்றால் சரியல்ல. கணக்கிற்காக என் மேலதிகாரி எதிரி மீது போட்ட பொய் வழக்கிற்காக மேலதிகாரிகளுக்கு பவ்வியப்பட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியிடமிருந்து எந்த பொருட்களும் கைப்பற்றப்படவில்லை என்றும், எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொல்வது தவறு.

என்னால் இத்திறந்த நீதிமன்றத்தில் எதிரி /எதிரிகளின் வழக்குரைஞர் முன்பு சாட்சி சொல்ல சொல்ல என்னால் சான்று மொழி எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் சரி என்று ஒப்புக்கொண்ட பின்னர் கையொப்பம் பெறப்பட்டது என்றும் சான்றளிக்கிறேன்.

M VASANTHA KUMAR

Digitally signed by M VASANTHA KUMAR
Date: 2026.03.05 16:46:16 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி
அருப்புக்கோட்டை.